செ. கு. எண்:23 நாள்: 7–2–2011

**பால் உற்பத்தியாளர் சிலரின் போராட்டம் குறித்து அமைச்சர் மதிவாணன் விளக்கம்.**

பால் கொள்முதல் விலையை சில நாட்களுக்கு முன்பு தான் அந்தச் சங்கத்தினரை நான் அழைத்துப் பேசி உயர்த்தி அறிவித்தேன். கொள்முதல் விலையை உயர்த்திய போதிலும், அதனை வாங்குவோர் பாதிக்கப்படக் கூடாது என்பதற்காக பால் விற்பனை விலையை உயர்த்தவில்லை.

ஆனால் மேலும் பாலின் விலையை உயர்த்தித் தர வேண்டுமென்று ஒரு சில பால் உற்பத்தியாளர்கள் சங்கங்கள் சில உள்நோக்கத்துடன் இன்றையதினம் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளன. இதை மாநிலம் முழுவதும் நடைபெறும் போராட்டம் என்றும், சென்னையிலே கடைக்காரர்களுக்கு ஆவின் பால் குறைப்பு என்றும் “மாலை முரசு” நாளேடு வேண்டுமென்றே திரித்துச் செய்தி வெளியிட்டுள்ளது. இதிலே எந்தவிதமான உண்மையும் இல்லை. சென்னை நகரிலே எப்பொழுதும் விநியோகிப்பதைப் போலவே இன்றைக்கும் தங்குதடையின்றி பால் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

பால் கொள்முதல் விலையைப் பொறுத்தவரையில், பசும்பாலுக்கு லிட்டருக்கு 5 ரூபாயும், எருமைப்பாலுக்கு லிட்டருக்கு 8 ரூபாயும் விலையை உயர்த்தித் தர வேண்டுமென்று வலியுறுத்தி இந்தப் பால் உற்பத்தியாளர் சங்கத்தினர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

பால் கொள்முதல் விலையைப் பொறுத்த வரையில் :

2001–2006 வரையான அ.தி.மு.க. ஆட்சியில் ஐந்து ஆண்டுகளில் பசும்பாலுக்கு லிட்டர் ஒன்றுக்கு 1 ரூபாய் 50 காசுகள் மட்டுமே கொள்முதல் விலையை உயர்த்தி வழங்கியது.

அதேபோல, 2001–2006 வரையான ஐந்து ஆண்டுகளில் எருமைப்பாலுக்கு லிட்டர் ஒன்றுக்கு 1 ரூபாய் 56 காசுகள் மட்டுமே கொள்முதல் விலையை உயர்த்தி வழங்கியது.

ஆனால், தி.மு. கழக அரசு 2006–ல் பதவியேற்ற பிறகு, கடந்த நான்கரை ஆண்டுகளில் பசும்பாலுக்கு லிட்டர் ஒன்றுக்கு கொள்முதல் விலையை 6 ரூபாய் 60 காசுகள் கூடுதலாக உயர்த்தி வழங்கியும், அதேபோல, எருமைப்பாலுக்கு லிட்டர் ஒன்றுக்கு கொள்முதல் விலையை 12 ரூபாய் 70 காசுகள் கூடுதலாகவும் உயர்த்தி வழங்கியுள்ளது.

ஆனால் இதற்கு மேலும் விலையை உயர்த்த வேண்டுமென்று கேட்பது நியாயம் தானா என்பதை பொதுமக்கள் தான் உணர்ந்து பார்க்க வேண்டும்.

சென்னையில் தொடர்ந்து தினந்தோறும் வழங்கக்கூடிய 10 இலட்சத்து 50 ஆயிரம் லிட்டர் ஆவின் பால் இன்றுவரையிலும் தங்குதடையின்றி வழங்கப்பட்டு வருகிறது. நுகர்வோரிடமிருந்து ஆவின் பால் தட்டுப்பாடு என்று எந்தவிதமான புகாரும் வராத பட்சத்தில், மாலைமுரசு நாளிதழ் இதைப் பெரிதுபடுத்தி உண்மைக்கு மாறான செய்திகளை வெளியிட்டு வருவது சரியானதல்ல. நுகர்வோருக்கு ஆவின் பால் வினியோகம் தங்கு தடையின்றி நடைபெறும்.

கழக அரசு பொறுப்பேற்ற பிறகு பால் உற்பத்தியாளர்களுக்கு எந்த அளவிற்கு விலை உயர்த்தி கொடுக்கப்பட்டுள்ளது என்பதையும் – விற்பனை விலையைத் தற்போது உயர்த்தினால், பொதுமக்கள் மிகுந்த சிரமத்திற்கு ஆளாவார்கள் என்பதையும் மனதில் கொண்டு, போராட்டத்தில் ஈடுபடுபவர்கள் தங்களது போராட்டத்தைக் கைவிட்டு, இந்த அரசுக்கு முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**********

வெளியீடு: –
இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், செ 9.